மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1996) நிறைவேற்றப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1996

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1996), மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1996) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

@28-2-1996-ஆம் நாளன்று தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு *2*, திருத்தங்கள் இல்லை.

பிரிவு *2*, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு *1*, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.9/1996) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

12. பத்தாவது பேரவை நிறைவுநாள் வாழ்த்துரைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் மட்டுமன்றி, 10-வது சட்டமன்றப் பேரவையின் நம்முடைய சட்டமன்ற அலுவல்களும் முடிவு பெறுகின்ற நிலையில் இன்றைக்கு நாம் இருக்கிறோம். இந்த 10-வது சட்டமன்றப் பேரவையின் சட்டமன்ற நடவடிக்கைகள் நிறைவு பெறுகின்ற இன்று எல்லோரும் மகிழ்ச்சிகரமாக கலைந்து செல்வது மனித எதிர்பார்ப்பு, இயற்கை என்கின்ற வகையில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-வது சட்டப் பேரவையின் இறுதிக் கட்டத்தில், இறுதி நாளுக்கு நாம் அனைவரும் வந்து சேர்ந்திருக்கிறோம். விழாக்கள் நடைபெறும் காலத்தில் இறுதிக்கட்ட நாளை விடையாற்றி விழா நாள் என்று அழைப்பார்கள். விழாவில் ஒன்று கூடியவர்கள் பிரியும்போது மீண்டும் கூடுவோம் என்று முகமன் கூறி விடை பெறுவார்கள்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதில்
அனைத்தே புலவர் தொழில் "

என்பது வள்ளுவர் வாக்கு. சால்புமிக்க சான்றோர்கள் தலைநாளில் மகிழ்ச்சியோடு கூடி, மன உருக்கத்தோடு இறுதி நாளில் பிரிவார்கள் என்று வள்ளுவர் பெருந்தகை சிறப்பாகக் கூறியிருக்கிறார்கள். என்னைப்